# நெடுங்கேணியில் புலிகள் அதிரடி; சிப்பாய் பலி


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 11 இதழ் 13
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-2-1994


## ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)
முல்லை மாவட்டத்தின் நெடுங்கேணிப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்

(4-ம் பக்கம் பார்க்க)

## கப். கொத்தலாவல பூநகரி அனுப்பப்படுவோர்

(கொழும்பு)
கப்டன் கொத்தலாவல பூநகரி இராணுவ முகாமில் தனது கடமையை இவ்வாரம் பொறுப்பேற்பார் என ராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிங்க ரெஜிமென்டின் 8 வது படைப்பிரிவின் கமாண்டரா இவர் இன்று கடமையாற்று வார் எனவும் கூறப்படுகிறது. முன்னர் இவர் யாழ்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகு சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

★ கொழும்பில் தொடர்ந்து கைது நடவடிக்கை

# சர்வதேச சட்டங்களையும் மீறி

# தமிழர் மீது கொடூர சித்திரவதை

## மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)
சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் எதேச்சதிகாரமான முறையில் கொழும்பில் ஒவ்வொருமாதமும், ஆயிரக்கணக்கான தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு கடும் சித்திரவதைகள் மூலம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டு வருகின்றன என்று சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை குறித்து அண்மையில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்படும் பெருமளவு தமிழர்கள் எந்தவித காரணமுமே இல்லாது கைது செய்யப்பட்டவர்களாவர். அவர்களைப் கைது செய்து தடுத்துவைப்பதற்கான ஒரே காரணம் அவர்கள் தமிழர்கள் என்பதாகும். இப்படியான கைதுகள் சர்வதேச சட்டத்தை மீறும் ஒரு செயலாகும்.

கடந்தவருடம் ஜூலை மாதத்துக்கும் டிசம்பர் மாதத்துக்கும் இடையில் கொழும்பில் சுமார் 15 ஆயிரம் தமிழர்கள் கைது செய்யப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை குழுவுடன் படை ஒத்துழைப்பதில்லை!

(லண்டன்)
"இலங்கை அரசு சர்வதேச சட்டங்களை மதித்து அதற்கேற்ப நடக்க வேண்டிய பொறுப்பில் உள்ளது. அவசரகால சட்டத்திற்கமைய கைது செய்யப்படுவோரைக் கூட மறைவிடங்களில் வைத்திருக்க முடியாது".

இவ்வாறு சர்வதேச மனித உரிமைக் அமைப்பு பிரதிநிதி ஒருவர், கொழும்பில் தமிழர்கள் கைதாவது குறித்து பி. பி. ஸி நிருபர் கேள்வி கேட்டபோது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் மனித

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்குள் 'றோ' ஆயுதக் குழு ஊடுருவலாம்

(கொழும்பு)
ராஜீவ் காந்திக்கு விசுவாசமுள்ள ஆயுதக் குழு ஒன்று, விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனைப் பிடிக்கும் நோக்கில், இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் நுழைந்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது பற்றிப் பாதுகாப்பு அமைச்சு கூறுகையில், இவ்வாறான தகவல் எதுவும் தங்களுக்குக் கிடைக்கவில்லை எனக் கூறியுள்ளது. இது பற்றிப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன்

(4ம் பக்கம் பார்க்க)

## இளாலி கடலேரியைப் பிடிக்க கடற்படையினர் முயற்சி!

(கொழும்பு)
யாழ். கடல் நீரேரிப் பகுதியை மீண்டும் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர கடற்படையினர் விரைவில் முயற்சிப்பார்கள் எனவும் மீண்டும் நாகதேவன் துறையில் கடற்படை முகாமை அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது படையினரின் பாரிய நடவடிக்கையின் ஒரு அங்கமாகவிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கடல் நீரேரிப்பகுதியில் கடற்படையினரின் நடமாட்டம் இல்லாது போனதால் புலிகள் தாராளமாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் நாகதேவன் துறை கடற்படை முகாம் அழிக்கப்பட்டமை புலிகளுக்கு நன்கு சாதமாகிவிட்டது. இதேவேளை இதற்கு முன்னர் இளாலி பகுதியில் கடற்படைக்கும் கடற்புலிகளுக்குமிடையில் அடிக்கடி சண்டை நடைபெறும்.

தற்போது இளாலி பகுதி யூடாக புலிகள் குடாவிலிருந்து தமது ஆட்களையும் யுத்த உபகரணங்களையும் கடற்படையினரின் எதிர்ப்

(4ம் பக்கம் பார்க்க)

## பாரிய தாக்குதலுக்கு புலிகள் திட்டமாம்

(கொழும்பு)
உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைவதற்கு முன்போ அல்லது பின்போ விடுதலைப் புலிகள், இராணுவத்தின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத்திட்டமிட்டு வருவதாக இராணுவ உளவுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இத்தாக்குதலை சமாளிக்க 24 மணி நேரமும் வடக்கு கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து முகாம்களிலுள்ள படையினரை உஷாரக இருக்கும்படி இராணுவத் தலைமைச் செயலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ - வி-ரி)

## படை உயர் அதிகாரிகளுக்கு ராணுவ தளபதி எச்சரிக்கை!

(கொழும்பு)
பத்திரிகைகளுக்கு இராணுவ தகவல்களை வழங்கும் படை அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி. சில்வா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் இவர் சகல இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் கடுமையான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அக்கடிதத்தில், தனது எச்சரிக்கையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராணுவ தகவல்களை வெளியிடும் அதிகாரிகளை இனம் காண தமது முழு ஆதரவும் வழங்கப்படுமென பிரதமர் ரணில் கூறியுள்ளதாகவும் தகவல்களை வழங்குவோருக்கு கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் ஜெரி டி. சில்வா குறிப்பிட்டுள்ளார். சகல தகவல்களும் இராணுவ பேச்சாளருடன் கலந்தாலோசிக்கப் படவேண்டுமெனவும் கூறியுள்ளார்.

விரக்தியுற்ற இராணுவ அதி

(4-ம் பக்கம் பார்க்க)

## பொருள் விலை உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)
அப்பம் கட்டணத்தால் யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதையும், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைக்கண்டித்தும் மார்ச் 1ம் திகதி செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியும், யாழ் செயலகத்துக்கு முன்னால் மறியல் போராட்டமும் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் மேற்படி போராட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## வரிவிளம்பரம்

**மணமகன் தேவை**

யாழ். இந்து. 41 வயது, 4' 10'' உயரம் பூரம் 2, செவ்வாய் 6, பாலம் 3 ஆசிரியைக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முழு விபரமும் குறிப்பும் அனுப்பவும். விளம்பர இல:- இ-821, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(இ-821)

**வாருங்கள் திருத்திப்பாருங்கள்**

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப்பாகங்களுக்கான தகுந்த நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகில்) கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3848)

**வர்ண வேலைகள்**

விளம்பரப் பலகை, இலக்கத் தகடுகள், மனித உருவப் படங்கள், கடைவர்ணம் தீட்டுதல், வீடுகள் வர்ணம் தீட்டுதல், கோலங்கள் வரைதல், சாமி உருவப்படங்கள் ஆகிய வர்ண வேலைகளும் குறித்த தவணையில் ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும். பூபதி ஆட்ஸ். தொடர்பு முகவரி: டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகாமையில்)

(ஏ 3845)


# முதலாம் ஆண்டு நினைவு நெஞ்சின் அலைகள்



★ தோற்றம் 11 — 4 — 1904

★ மறைவு 5 — 3 — 1993

## திருமதி அன்னம்மா பொன்னுத்துரை

(மலாயன் பென்சனியர்)

திதி: 23 - 2 - 1994

அன்பின் அம்மாவே! நீங்கள் மறைந்து விட்டீர்கள். உங்கள் அன்பு எங்களை என்றும் நினைவில் ஆழ்த்தும் அம்மா!

ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கும்!

மக்கள், மருமக்கள்:
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"இமேம்ஸ் இல்லம்"
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

இ-823


எமது வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி!

கண்டவுடன் சொக்கிப் போகும் காட்சி மிகு மாடமாக புதிதாக அமைகின்றன்



# வீடியோ எக்கனோமி

எமது ஸ்தாபனத்தின்
மங்களகரமான



## திறப்பு விழா

இன்று புதன்கிழமை (23-02-1994) நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

உங்கள் ஆவல்களைப் பூர்த்தி செய்யும்:

★ புதிய பழைய வீடியோ திரைப்பட பிரதிகளையும்
★ தமிழீழக் கலைஞர்களால் தயாரித்து வெளியிடப்படும் ஒளிவீச்சு வீடியோ நாடாக்களை வாடகைக்கு பெறவும்
மற்றும்
★ அன்பளிப்பு பொருட்கள் ★ பாடசாலை உபகரணங்கள்
★ அழகு சாதனப் பொருட்கள் போன்றவற்றை நிதான விலையில்

நீங்கள் பெற நாடுங்கள்

## வீடியோ எக்கனோமி

இன்னும் நீங்கள் அதிசயிக்க பாடல் பதிவில் பல வருட அனுபவமிக்க

## நியூ வே றெக்கோடிங்

**V. சந்திரன் அவர்களால்**

நீங்கள் விரும்பும் பாடல்களை ஒலிப்பதிவு செய்து எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள

(சென்றல் நர்ஷிங்கோம் அருகாமை)

# ★ வீடியோ எக்கனோமி ★

## VIDEO ECONOMY

இல 303 A பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

இதனைத் தங்கள் நண்பர்களை நாடும்:

உரிமையாளர்:— ஆறுமுகம் ரமேஷ்

(ஏ-3853)


# இளம் கலைஞர் மன்றம்
# 14 - வது இசைவிழா

இடம்: கலா மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.
12ம் நாள்
23-2-94 புதன்கிழமை
உதயன்
பத்திரிகைநிறுவனத்தின் ஆதரவில்

மாலை 4-00 — 5-00 மங்கள இசை

ஏ. மகேந்திரன்
கே. கிருஷ்ணதாஸன் } நாதஸ்வரம்
எஸ். தேவதாஸன்

எஸ். ஜெயபாலந்தன்
எஸ். மூர்த்தி } தவில்
ஜே. கண்ணன்

5-00 — 5.20 பாட்டு

வை. கல்யாணி
வை. யசோதை } பாட்டு
எஸ். சசிரேகா

சுசித்ரா - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

5-20 — 5-40 புல்லாங்குழல்

ரஞ்சனி ராமலிங்கம்
இந்திரா பொன்னுத்துரை } புல்லாங்குழல்
சுரேந்தினி சிதம்பரநாதன்

சு. சுஜித்ரா - வயலின்
ம. ஜெகன் - மிருதங்கம்

5.40 — 6-15 பாட்டு

சி. சந்தானலட்சுமி - பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா - வயலின்
சதாவேல்மாறன் - மிருதங்கம்

6-15 — 7-00 பாட்டு

சக்திதேவி சிவகுமார் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்

7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்

வீ. எஸ். பாலச்சந்திரன், எஸ். சுப்பிரமணியம் (பெரம்பே)
செல்வரெட்ணம் (செல்லம்ஸ் நெடுங்கேணி)
இ. இராமச்சந்திரன் கோல்டன் செரமிக்)

அருள் உரை:
பிரம்மஸ்ரீ ஜெயந்திநாத குருக்கள்
(பிரதமகுரு நந்தாவில் அம்மன் தேவஸ்தானம்)

தலைவர்:
திருமதி மனோன்மணி சண்முகதாஸ் (எம். ஏ.)

பிரதம விருந்தினர்:
திரு. ச. சரவணபவன் (நிர்வாக இயக்குனர், உதயன் நிறுவனம்)

சிறப்பு விருந்தினர்
திரு. கே. எம். பஞ்சாபிகேசன்
(நாதஸ்வர வித்துவான்)

7-30 — 8 30 வீணை இசை

நந்தினி விஜயரத்தினம் - வீணை
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
சதா வேல்மாறன் - கடம்

8-30 — 9-30 பரதநாட்டியம்

"நளாயினி இராஜதுரை அவர்களின் மாணவிகளும்"
திருமறைக் கலாமன்ற மாணவிகளும்
இணைந்து வழங்குவர்.

தயாரிப்பு: நளாயினி இராஜதுரை

வாழ்த்துவோர்:

## ஸ்ரீ நதியா ஜூவல்லர்ஸ்

2 ஜி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ 3826)

**காட்டின் மரம் உயர**
**நாட்டின் தரம் உயரும்**

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

**மணிவாக்கு**

எண்ணெய் இல்லாத விளக்கும்; பொறுமை இல்லாத மனிதனுக்கும் மதிப்பில்லை.

- லெகோலியர்

# நமது நோக்கு

## கப்பற் கட்டணம்!

ஒரே நாடு, ஒரே அரசு எனச் சொல்லிக் கொண்டு, பல இன மக்களை ஒரே குடையின்கீழ் ஆள ஆசைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள், ஓரின மக்களுக்கு ஓரவஞ்சக நடவடிக்கைகளை எடுப்பது எவ்வாறு நீதியாகும்?

ஆக்கிரமிப்பு எண்ணத்தோடு அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. உரிமை வேட்கையால் அதைத் தாக்கும் சக்தியைப் பெற்ற மக்கள், அதை எதிர்க்கவும் வெற்றி காணவும் துணிந்துவிட்டார்கள் என்பதைக் கண்ட அரசு, பழிவாங்கும் நோக்கோடே, உடல், உள ரீதியாக மக்களை நசுக்கும் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளதா?

இங்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்குக் கப்பற் கட்டணம் வசூலிக்க எடுக்கும் நடவடிக்கை இச்சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது!

விவசாய ஊக்கத்தைக் கெடுக்கும் விதத்தில், பல மறைமுக நெருக்குதல்களைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற போர்வையில் அரசு செய்து வருகின்றது!

எரிபொருள் தடை, மின்சாரத் தடை மூலம் பொருள் வருவாயில் கட்டுப்பாடு, போக்குவரத்துத் தடை போன்றவற்றால் கைத்தொழில்கள் நசுக்கப்பட்டதால், வருமானம் இழந்து, மக்கள் வேதனைகளின் மத்தியில் உயிரைக் கையிற் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பனையால் விழுந்தவனை மாடேறி உழக்கினதாம்!

ஏற்கனவே பாதிப்புற்ற மக்களுக்குக் கப்பற் கட்டணம் வசூலித்து, அன்றாடப் பாவனைப் பொருட்களான, மா, சீனி போன்றவற்றிற்கு விலை ஏற்றத்தை உண்டுபண்ணுவது மக்கள் வயிற்றில் அடிக்கும் செயல் மாபெரும் பாதகமல்லவா?

ஏனைய மாவட்டங்களில் மக்கள் என்ன விலை கொடுத்து அன்றாடப் பாவனைப் பொருட்களை வாங்குகிறார்களோ, அதே விலையில் இங்கு அவை கிடைக்கவில்லை என்றால், ஓரின மக்கள்மீது எடுக்கப்படும் பாரபட்ச நடவடிக்கை என்றே பொதுமக்கள் கருதுவார்கள்; உலகப் பொதுக் கருத்தும் அவ்வாறே அமையும்.

மக்களின் மனக் கொதிப்பை, வேதனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும்?

யாழ். மாவட்ட பொது மக்கள் அமைப்புகளின் ஒன்றியம் இது பற்றி விடுத்த வேண்டுகோளை அரசு பொறுப்போடு பரிசீலிக்கும் என நம்புகிறோம்!

# இராசிபலன்

**23-02-1994**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு மாசி 11)**

துவாதசி மு. ப. 11-27 வரை! புனர்பூசம் மு. ப. 9-05 வரை. இராகு காலம் நண்பகல் 12-31 முதல் 2-01 வரை! சுபநேரம் காலை 5-01 முதல் 6-31 வரை; சித்த யோகம், பிரதோச விரதம்.

மேடம்- பயனற்ற வேலைகள், அதிருப்தி, மனபயம்.

இடபம்- விவேகிகள் சந்திப்பு, காரிய சித்தி, பண வசதி.

மிதுனம்- தொழில் அதிருப்தி, பயனற்ற பேச்சு, அலைச்சல்.

கடகம்- சிக்கல் தீரும், மனத்தைரியம், செல்வாக்கு.

சிம்மம்- அசாத்திய எண்ணங்கள், நண்பர் தொல்லை, வேதனை.

கன்னி- தொழில் லாபம், அதிக பணி, விவேகமான முடிவு.

துலாம்- அறிஞர் நேசம், உற்சாகம், புதிய முயற்சி.

விருச்சிகம்- குடும்ப சிந்தனை, பிறரிடம் கடன், அமைதியின்மை.

தனுசு- ஆவேசப் பேச்சு, குழப்பமான மனநிலை, சரீரக் கேடு.

மகரம்- சமயோசித புத்தி, இலாபகரமான சூழ்நிலை, வெற்றி.

கும்பம்- தர்ம சிந்தனை, எதிர்பாராத கௌரவம், பாராட்டு.

மீனம்- தர்மசங்கடமான நிலை, அகால உணவு, வேண்டாத தொல்லை.

— ஜோஸ்யர்

★ கடற்படைக்கு நாளொன்றுக்கு

# 4 லட்சம் ரூபா வாடகையில்

## கப்பல்களை வாடகைக்கமர்த்த முயற்சி

(கொழும்பு)

கடற்படையினரது போக்குவரத்திற்கும், இராணுவத் தளபாடங்களை கொண்டு செல்வதற்குமாக வெளிநாட்டுக் கப்பல்களை நாளொன்றுக்கு சுமார் 4 லட்சம் ரூபா செலவில் வாடகைக்கு அமர்த்த சில சக்திமிக்க அதிகாரிகள் சிபார்சு செய்துள்ளனர் எனினும் இந்தச் செயற்கடுக்கு கடும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

இது குறித்து "சண்டே ஐலண்ட்" மேலும் கூறுகையில்: புலிகளுக்கு எதிரான போரில் பொருத்தமற்ற பழைய கப்பல்களைப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தச் சில அதிகாரிகள் முயற்சிக்கிறார்கள். இதற்கு நாளொன்றிற்கு 8,000 அமெரிக்க டாலர் வாடகையாக வழங்க வேண்டும்.

இது பற்றி படை அதிகாரி ஒருவர் கூறுகையில்: புலிகளுக்கு எதிரான போருக்கு தேவையின்றி அதிகளவு பணத்தை வீணாகச் செலவிட முடியாது என்றார். மற்றொரு அதிகாரி கூறுகையில், இவ்வளவு தொகைப் பணத்தைக் கொடுத்து இவ்வாறானதொரு முயற்சிக்காக வாடகைக்குக் கப்பலை அமர்த்தத் தேவையில்லை என்றார். குறிப்பிட்ட சில நபர்கள் அரசை வற்புறுத்தி இக்கப்பலை வாடகைக்கு அமர்த்தச் செய்து அதன் மூலம் பணம் சம்பாதிக்க முயல்கிறார்கள் என்றார்.

இந்த நபர்கள் கொல்லப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி க்லான்சி பெர்னாண்டோ காலத்தில் இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தனராம். இக் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துமாறு இக் கப்பல் சொந்தக்காரர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## தவக்கால நற்சிந்தனை

"தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா! நீ புறக்கணிப்பதில்லை!"

(சங். 50:17 ஆ)

நாம் பாவம் செய்வது எளிது. ஆனால் அதன் கனாகனத்தை என்றும் உணர்வதில்லை. எமது பாவங்களை நினைந்து மனம் வருந்த வேண்டும். வருந்திய உள்ளத்தோடு இறைவனைக் கூவியழைக்க இறைவன் இரக்கம் நிறைந்தவராக இருக்கிறார்: இதனைச் சுத்தியோடு இறைஞ்சுவோரை அவர் என்றும் புறக்கணிக்க மாட்டார். அன்புக் கரம் நீட்டி அரவணைப்பார்.

- ஜோ. தா.


யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

## மண்ணெண்ணெ விநியோகம்

யாழ்/தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையினரால் 1994-ம் ஆண்டு மாணவர்களுக்கு மண்ணெண்ணெ விநியோகிக்கப்படும்.

வியாழன் 24-02-94
வெள்ளி 25-02-94
காலை 10 — 1 மணி வரை
சனி, ஞாயிறு 26 02-94, 27-02-94
மாலை 1 — 4 மணி வரை

மாணவர் அவை.

(சி 824)

# சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்

# மீண்டும்

## இல. 356, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில்

புதுப்பொலிவுடன் மங்களகரமாக

# விற்பனையை ஆரம்பிக்கின்றது

மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு மாசித்திங்கள் 11-ம் நாள்

## 23-2-1994 புதன்கிழமை(இன்று)




காலை 11-30 முதல்
12-30 வரையுள்ள
சுபவேளையில்

எமது நிறுவனம்
புதிய முகவரியில்
இயங்குகிறது



வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவரையும் இந்நிகழ்ச்சியில்
கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன்
அழைக்கின்றோம்.



உங்கள் சைக்கிள் உதிரிப்பாகங்களை யாழ். நகரில் நிதானவிலைக்கு
பெற்றுக்கொள்ள 15 வருடகால நன்மதிப்புப் பெற்றவர்கள்

# சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்

(சிவன்கோவில் முன்பாக)

## 356, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

(ஏ 3849)

